முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1057

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.08.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அறம்தனை காத்திடும் தேசிகா வாழ்க
மாறுதலை உலகில் செய்வேன் என்று
மாதவம் புரிகின்ற குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 05 நாள், 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஊழ் போக்கும் மகா சக்திகொண்ட
உயர் ஞானி அரங்கன் நீயப்பா
3. அப்பனே உன் தவ தர்ம பலம் தானே
அகிலத்தை மாற்றம் செய்து காத்தருளக்கூடும்
ஏற்றம் தரும் ஒரே தவயோகி இந்த
உலகை மீட்கும் மாதர்மவான் நீ
4. ஆற்றல்பட உன்னை உலகோர் வணங்க
அகிலத்தில் அற்புதம் நிகழக்கூடும்
மாற்றம் தர உன்னுள் யானே இருந்து
மகத்துவத்தை நித்தம் புரிந்து வருகின்றேன்
5. வருகவே உன் கரம்பட தீட்சை
வையகத்தில் பெற்ற மக்களெல்லாம்
ஆற்றல் பெருகி இந்த உலகை ஆளும் சக்தி
ஆறுமுகன் என் தலைமை கொண்ட சக்திபெற்று
6. பெற்றுமே கலி இடர்களெல்லாம் சடுதி விலகி
பேருலகம் அமைதி பாதுகாப்பு மிக்க ஞான உலகமாக மாற்றம் கண்டு
ஆற்றல்பட ஆறுமுகன் என்னருளால்
ஐயமற ஞான ஆட்சி உலகம் காணக்கூடும்
7. அகிலத்தார் அரங்கன் வழி தொடர்ந்து வர
இந்த அற்புதம் நிகழும்
நிகழவே அரங்கனுள் யானிருக்கேன்
நிலைத்து வரும் மக்களுக்கு காட்சி உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–